உ
சற்குருவே துணை

குருவருளே திருவருள்!

இறைவன்
விருப்பம் நிறைவேற
அவகாசம் அளித்து
பொறுமையுடன்
காத்திருப்போம்...

திருவருளே குருவருள்!

நெஞ்சகமே கோயில்...
நினைவே சுகந்தம்...
அன்பே மஞ்சன நீர்...
பூசை கொள்ள வாராய்...
பராபரமே...!



## சற்குரு ஹைகோர்ட்

# ஸ்ரீ ராஜ ராஜ சுவாமிகள் ஜீவசமாதி ஆலய 20-ம் ஆண்டு குருமங்கல பூஜை மற்றும் முதலாம் ஆண்டு நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்

**சித்திரை மாதம் 27-ம் நாள் 10.05.2026 ஞாயிற்றுக்கிழமை**
**( அவிட்டம் திரு நட்சத்திரம்)**

பல பணிகளோடு சேர்த்து இறைவனின் திருப்பணியும்
செய்வோம் வாருங்கள்

உ

குருவருளே திருவருள்! சற்குருவே துணை திருவருளே குருவருள்!

# சற்குரு ஹை கோர்ட் ஸ்ரீ ராஜராஜ சுவாமிகள்

பேரன்புடையீர் வணக்கம்!

சற்குரு ஹை கோர்ட் ஐயா எனப் போற்றப்படும் ஸ்ரீ ராஜராஜ சுவாமிகள், சென்னை உயர்நீதிமன்றத்தின் அருகில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக தவமிருந்து சமகால சித்தராக விளங்கினார். அவர் வாழ்ந்த காலத்தில், வழக்கறிஞர்கள், நீதிபதிகள் மற்றும் பொதுமக்களால் 'உயிருடன் வாழ்ந்த சித்தர்' என நினைவுகூறப்பட்டார்.

ஹை கோர்ட் ஐயா என்று எல்லோராலும் அன்போடும் பக்தியோடும் அழைக்கப்படும் ஸ்ரீ ராஜராஜ சுவாமிகள், அவர்களின் இயற்பெயர் என்னவென்பது யாருக்கும் தெரியாது. அவர் ஹை கோர்ட், பாரிமுனை, பஸ் நிலையம், பூக்கடை, தங்க சாலை, கொத்தவால் சாவடி என்று பாரிமுனையின் எல்லா இடங்களிலும் பக்தர்களுக்கு காணக் கிடைத்தவர். கடைசியில் மெட்ராஸ் ஹை கோர்ட்டின் வெளியே உள்ள சுற்றுச் சுவரின் ஓரமாக வெட்டவெளியில் வானமே குடையாக அமர்ந்து வெகு காலம் பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்து வந்தார்கள்.

அவர் ஆன்மீகப் பசியோடு தன்னை நாடி வந்த பக்தர்களுக்கு மட்டும் தான் ஒரு சித்த புருஷர் என்பதை அவர்கள் அறியும் வண்ணம் வெளிப்படுத்தினார். தான் அமர்ந்திருந்த இடத்தைச் சுற்றி கால் வைக்க முடியாத அளவிற்கு அவ்வளவு சுத்தமாக இல்லாமல் இருந்த போதிலும் ஐயா அவர்கள் கால் மேல் கால் போட்டு ஒரு மகாராஜாவைப் போல அமர்ந்து தெய்வீக நீதியை நிலைநாட்டி வந்தார். அனைவரையும் அன்புடன் வா தெய்வம் என்று அழைப்பார். நம்பினால் நீ தெய்வம்... நம்பு தெய்வம்...! என்பார் தவத்தினாலும் தர்மத்தினாலும் தன்னை உணர்ந்து தெளிந்தவன் ராஜராஜன் என்பார்.

அவரின் தாய் தந்தையரை பற்றியோ அல்லது அவரின் இயற்பெயரோ சொந்த ஊரோ ஒருவருக்கும் தெரியாது. கடைசியில் அவர் பக்தர்களால் அன்போடு சற்குரு ஸ்ரீ ராஜராஜ சுவாமிகள் என்று அழைக்கப்பட்டு வந்தார்.

வழக்கறிஞர்கள், நீதிபதிகள் மற்றும் வழக்குத் தொடருபவர்கள் மத்தியில் அவர் மிகப் பிரபலமாக இருந்தார். விசாரணைக்கு முன் அவரின் தரிசனம் பெற்றால், வழக்குகளில் நியாயமான அல்லது சாதகமான தீர்ப்பு கிடைக்கும் என பலர் நம்பினர்.

அப்போது சமகாலத்தில் வடபழனியில் அமர்ந்து தவம் புரிந்து வந்த ஸ்ரீ ல ஸ்ரீ பரஞ்சோதி பாபா மற்றும் சற்குரு மகான் வெங்கட்ராமசாமி சிவகங்கை இடையமேலூர் சற்குரு மாயாண்டி சித்தர் ஆகியோர் தன் சீடர்களிடம் ஹை கோர்ட் சென்று ஸ்ரீ ராஜராஜ சுவாமிகளை தரிசிக்க சொல்லி அனுப்பி வைத்தார்கள்.

தன்னைக் காண வரும் அடியவர்கள் அனைவரையும் ஒன்றாக பாவித்து அன்பு காட்டி நல்வழிப்படுத்திய மகா சற்குரு ஹைகோர்ட் ராஜராஜ சுவாமிகள் கடந்த 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி காலை அவிட்டம் நட்சத்திரத்தில் பேரண்டப் பிரபஞ்ச மகா சமாதிப் பெருநிலை எய்தி எல்லையற்று எங்கும் பரவினார்கள்.

தன் பக்தர்களிடம் அவர் முன்கூட்டியே அறிவித்தபடி நெட்டையும் குட்டையுமான பனை மரங்களுக்கு நடுவில் நீரோடைக்கு எதிரில் வெள்ளரை கிராமத்தில் ஜீவசமாதியில் (சித்தர் தன் உடலை உணர்வுடன் துறக்கும் நிலை) அமர வைக்கப்பட்டார். அது முதற்கொண்டு 18 வருடங்கள் அவருக்கு முறைப்படி குரு மங்கலப் பூசை ஒவ்வொரு வருடமும் தவறாமல் நடைபெற்றது.

பல சித்தர்களைப் போலவே, அவர் பெரும்பாலும் மௌனமாகவோ அல்லது குறியுரைகளாகவோ பேசுவார். அவரின் எளிய பார்வையாலும் அல்லது அவரின் ஆசீர்வாதத்தாலும் உடல் மற்றும் மன நோய்கள் குணமானதாக பக்தர்கள் பலர் பகிர்ந்து கொள்கிறார்கள். அவரால் ஆசீர்வதிக்கப்பட்டு வாழ்விக்கப்பட்டவர்கள் இன்று மிக உயர்ந்த நிலையில் உள்ளார்கள்

சுமார் 18 வருடங்கள் ஒளி உலகத்தில் பிரகாசித்தபடி இருந்த அவர் இந்த பூவுலகத்திற்கு திரும்பி வந்து ஜீவசமாதி அடைந்த இடத்தில் ஒரு ஆலயம் எழுப்ப தன் பக்தர்களுக்கு ஆணையிட்டார். அதன்படி ஊர் பொதுமக்கள் பக்தர்களின் பேராதரவுடன் ஒரே வருடத்தில் சற்குருவால் அமைக்க பட்ட அறக்கட்டளை மூலம் நல் உள்ளம் கொண்ட ஆன்மீக பெருமக்கள் ஆதரவால் பிரம்மாண்டமான ஆலயம் எழும்பி சித்திரை மாதம் 10 ம் நாள் (23.04.2025) புதன்கிழமை அன்று திருக்குட நன்னீராட்டு பெருவிழா மற்றும் 19 ஆம் ஆண்டு மகா குரு மங்கல பூசை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

தெய்வீக நீதி ஆலயமாக கருதப்படும் இந்த ஜீவ சமாதி ஆலயத்தில் பலனடைந்த பக்தர்களின் சான்றுகள் ஏராளம் ஏராளம். சற்குரு ஸ்ரீ ராஜராஜ சுவாமிகள் ஜீவ சமாதி அடைந்த பின்னரும் அவரை தரிசிக்க வாழும் மகான்களும் சித்த புருஷர்களும் ஜீவ ஆலயம் அமைந்திருக்கும் இடம் வந்து தரிசித்து சென்று வருகிறார்கள.

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2057 அருட்டோற்றம் எனும் பராபவ வருடம், மேழம் எனும் சித்திரை மாதம் 27-ம் நாள் (10.05.2026) ஞாயிற்றுக்கிழமை, எண்மை பிறைநாள் எனும் அஷ்டமி திதி, காக்கை நாண்மீன் எனும் அவிட்டம் நட்சத்திரம் கூடிய மிதுன லக்னத்தில் காலை 9.00 மணிக்கு மேல் 11.00 மணிக்குள் நல்லோரையும், நற்கரணமும் கூடிய நல்வேளையில் தெய்வத்தமிழ் மந்திரங்கள் ஓதி வேள்வி வழிபாடும், நன்னீராட்டுப் பெருவிழாவும் குருபூசை வழிபாடும் நடைபெற உள்ளது.

அதுசமயம் அடியார் பெருமக்களும், பக்தகோடிகளும் மற்றும் ஊர் பொதுமக்களும் அவசியம் வந்து இப்பெருவிழாவில் கலந்து கொண்டு இறையருளை பெற அன்போடு அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சிநிரல்

**10.05.2026, ஞாயிற்றுக்கிழமை**

காலை 9.00 மணிக்கு திருவிளக்கு ஏற்றுதல், திருமுறை வழிபாடு, திண்ணெண்ணம் பூனுதல், சிறப்பு அபிஷேகம், பிள்ளையார் வழிபாடு, அம்மையப்பர் வேள்வி, நவகோள் வேள்வி, திருமுறை விண்ணப்பம், சித்தர் போற்றி, நிறைவு நல்கல், நன்னீராட்டு பெருவிழா, அமுதூட்டல், பேரொளி வழிபாடு, வாழ்த்து, பிழைப்பொறுத்தல், வழிபாடு நிறைவுருதல்

காலை 8.00 மணிமுதல் தொடர் **அன்னதானம்** நடைபெறும்

**ஆதி முதலோன் சிவ பூதகணங்கள்** வழங்கும் **திருகைலாய வாத்திய இசை**

மதியம்: 12.00 மணிக்கு மேல்
**இசை நிகழ்ச்சி : ரசிகப்பிரியம் சிவதாசன் பக்தி இசை**

மாலை: 6.00 மணிக்கு மேல் குரு. திருமதி. **சங்கீதா** அவர்கள்
**Sri Sangeeth Natiyalaya** மாணவர்களின் பரதநாட்டிய கலை நிகழ்ச்சி

# சற்குரு ஐகோர்ட்
# ஸ்ரீ ராஜராஜ சுவாமிகள்

### ஜீவ சமாதி ஆலயம் அமைந்திருக்கும் இடம்

இடம் : வெள்ளரை கிராமம், கண்ணந்தாங்கல் சாலை, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் - 602 105.

பஸ்ரூட்:
ஸ்ரீ பெரும்புதூர் - தாம்பரம் மணிமங்கம்
வழியாக செல்லும் பேருந்து

பஸ் எண் : 55N, 583C, 583D
வேல்முருகன் பேருந்து
இறங்குமிடம் : கொளத்தூர்

கொளத்தூர் பஸ் நிறுத்தத்திலிருந்து
ஜீவ சமாதி வரை சென்று வர இலவச
வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்ஙனம்

## சற்குரு ஸ்ரீ ராஜராஜ சுவாமிகள் அறக்கட்டளை

**SATHGURU SRI RAJARAJA SWAMIGAL TRUST** (REGD. NO. 138/2024)

Email : srirajarajaswamigal@gmail.com Web : www.highcourtsrirajarajaswamigal.com
Phone : 9445044555, 9444367377, 9094140925, 7010612070

**S. அசோக் ராஜ்குமார்** – தலைவர்
**R. பஞ்சாட்சரம்** – துணை தலைவர்
**K. கோகுலகிருஷ்ணன்** – செயலாளர்
**G. ராஜ் ஆண்டோ** – பொருளாளர்

**B. பரந்தாமன்** – துணை செயலாளர்
**D. ஹேமநாதன்** – துணை செயலாளர்
**K. பாலசண்முக சாஸ்தா** – துணை செயலாளர்

சிறப்பு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் திருவாளர்கள்

**D. சக்திவேல்**
**G. சரஸ்வதி அம்மாள்**

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் திருவாளர்கள்

R. ரகு
K. ஆனந்தன்
D. சண்முக வேலாயுதம்
G. பிரபாகரன்
V. ஆதிகேசவன்
R. காசி விஸ்வநாதன்
R. தனலட்சுமி
D. ஆரோக்கிய திலகவதி

**ஆத்மார்த்த அன்பு நன்கொடைக்கு**

SATHGURU SRI RAJA RAJA SWAMIGAL TRUST
BANK : KOTAK MAHINDRA BANK - BRANCH : ANNA NAGAR
CURRENT ACCOUNT No. 0749900081
IFSC CODE : KKBK0000469

SCAN QR CODE